# QB365 Question Bank Software Study Material

## பொருளியல் - தமிழ்நாட்டில் தொழில்துறை தொகுப்புகள் முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்(புத்தக & ஆக்கபூர்வமான வினாக்கள்)

## 10ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 50

**2 மதிப்பெண் வினாக்கள்**

15 x 2 = 30

1) வேளாண்துறையில் ஊதியங்கள் ஏன் குறைவாக உள்ளன?

**பதில் :** 1. நிலத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறன் குறைந்து கொண்டே வருவதால் வேளாண் பணிகளுக்கு தொழிலாளர்களை ஈர்த்துக் கொள்வதில், ஆட்களை ஏற்பதில் பல வரையறைகள் பின்பற்ற நேரிடுகிறது.
2. பெருமளவிலான மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு வேளாண்மையை நம்பியிருப்பதாலும், கூலியை அதிகரிக்க வாய்ப்பில்லாததாலும் வறுமையின் அளவு தொடர்ந்து அதிகரிக்கிறது.

2) தொழில்துறை தொகுப்பு என்றால் என்ன?

**பதில் :** தொழில் தொகுப்புகள் என்பது பொதுவான சந்தைகள், தொழில் நுட்பங்கள் மற்றும் திறன்களுக்கான தேவைகளை பகிர்ந்துகொள்ள வரையறுக்கப்பட்ட புவியியல் பகுதியில் உள்ள நிறுவனங்களின் தொகுப்பு ஆகும்.

3) தொழில் தொகுப்புகள் உருவாவதற்கான வழிகள் யாவை?

**பதில் :** 1. தொழில் தொகுப்பு தோன்றுவதற்கு பல்வேறு காரணிகள் உள்ளன. ஒரு சில தொழில் தொகுப்புகள் தோன்றிய இடங்களில் கைவினைஞர்கள் குடியேறி நெடுங்காலமாக அங்கு தங்கி இருந்ததாகவும் வரலாறு கூறுகிறது. கைத்தறி நெசவுத்தொழில் வளர்ச்சி இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும்.
2. சில துறைகளில், ஒரு பெரிய நிறுவனம் நிறுவப்படும்போது, அதன் உள்ளீடு மற்றும் பணிகளின் தேவைகளை கவனித்துக் கொள்வதற்காக ஒரு தொழில் தொகுப்பு நிறுவனம் தோன்றக்கூடும்.
3. சில நேரங்களில் ஒரு வட்டாரத்திலிருந்து மூலப்பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தியை ஊக்குவிக்க அரசாங்கங்கள் முடிவு செய்யலாம். இது தொழில் தொகுப்பு தோன்றுவதற்கு வழிவகுக்கும்.

4) தமிழ்நாட்டில் உள்ள மூன்று தொழில்துறை வளர்ச்சி மேம்பாட்டு நிறுவனங்களைக் குறிப்பிடுக.

**பதில் :** **தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் (SIPCOT);**
தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் என்பது 1970ல் தொழில் முன்னேற்றத்திற்காக நிறுவப்பட்டு, தொழிற்தோட்டங்களை அமைத்தது.
**தமிழ்நாடு மாநில சிறுதொழில் வளர்ச்சிக் 'கழகம் (TANSIDCO):**
தமிழ்நாடு மாநில சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் என்பது 1970ல் தமிழக அரசால் நம் மாநிலத்தில் சிறுதொழில் முன்னேற்றத்திற்காக நிறுவப்பட்ட ஒரு அரசு நிறுவனமாகும். சிறு தொழிற்பிரிவின் புதிய நிறுவனங்களுக்கு மானியம் மற்றும் தொழில்நுட்ப உதவிகளையும் இந்த நிறுவனம் செய்கிறது.
**தமிழ்நாடு தொழில்துறை மேம்பாட்டுக் கழகம் (TIDCO):**
நம் மாநிலத்தில் தொழில் தோட்டங்களை நிறுவுவதற்கும் தொழிற்சாலைகளை மேம்படுத்துவதற்கும் உதவும் மற்றுமொரு அரசு நிறுவனமாகும்.

5) தமிழ்நாட்டில் தொழில்மயமாதலின் தற்போது சிக்கல்கள் யாவை?

**பதில் :** 1. தமிழகம், நமது நாட்டின் சிறந்த தொழில்மயமான மாநிலமாக இருந்தபோதிலும் சில குறைகளை சந்திக்க வேண்டியுள்ளது. வேதிப்பொருட்கள், ஜவுளித்துறை மற்றும் தோல் தொகுப்புகள் மூலம் வரும் திரவக் கழிவுகள் நமது சுகாதாரத்தைக் கெடுக்கிறது.
2. இந்த திரவக்கழிவுகள் சேரும் நீர்நிலைகளை மட்டுமல்லாமல் அதையொட்டியுள்ள விவசாய நிலங்களையும் மாசுபடுத்துகிறது. இந்தக் குறைகள் உடனடியாக கவனிக்கப்பட வேண்டியது ஆகும்.
3. உலகளாவிய அளவில் போட்டி போடுவதற்காக முதன்மையான தொழில் நுட்பங்களை பயன்படுத்துவதால் நிலையான வேலை வாய்ப்புக்கான குறை ஏற்படுகிறது. பணியாளர்களின் தரமானது, இன்றைய காலக்கட்டத்தில் தற்காலிகமாக பணியமர்த்துவதால் குறை ஏற்படுகிறது.

6) தொழில் முனைவோர் என்பவர் யாவர்?

**பதில் :** ஒரு "தொழில் முனைவோர்" என்பவர் புதிய சிந்தனைகளுக்கும், வணிக செயல்முறைகளுக்கும் புத்தாக்கம் புனைபவர் ஆவார். இவர்களிடம் சிறந்த நிர்வாகத் திறன், வலிமையான குழுவை அமைக்கும் திறமைகளும் மற்றும்

தேவையான தலைமைக்கான பண்புகளும் இருக்கும்.

7) தொழில் முனைவு என்றால் என்ன?

**பதில் :** தொழில் முனைவோர் தங்கள் தொழிலை பெருக்குவதற்கான செயல்முறைகளே தொழில் முனைவு எனப்படும். இவை ஒன்றை உருவாக்குவதற்கும் மேலும் பெரிதுபடுத்துவதற்குமான திறன் ஆகும்.

8) வளரும் பொருளாதாரம் ஏன் விவசாயத்திலிருந்து பன்முகப்படுத்தப்பட வேண்டும்?

**பதில் :** 1. உணவுத் தேவையுடன் வருமானத் தேவையும் நிலையானதாக உள்ளது. எனவே ஒரு நாட்டின் பொருளாதாரம் வளர்ந்து வருமானம் அதிகரிக்கும் பொழுது நுகர்வோர் வேளாண்மை உற்பத்தி பொருட்களுக்கு தங்கள் வருமானத்தில் ஒரு சிறு பகுதியை மட்டுமே செலவிடுகிறார்கள்.
2. நுகரப்படும் உணவு பொருளாதார விரிவால் பல மாற்றங்களுக்கு உட்படுகிறது. உணவுப் பொருட்கள் நீண்ட தூரத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பதப்படுத்தி முத்திரையிடப்படுகிறது. இதன் விளைவாக நுகர்வோர் வாங்கும் விலையை விட விவசாயிகள் பெறும் விலை குறைவாக உள்ளது.
3. நிலத்தின் இறுதிநிலை உற்பத்தித்திறன் குறைந்து கொண்டே வருவதால் வேளாண் பணிகளுக்கு தொழிலாளர்களை ஈர்த்துக் கொள்வதில் ஆட்களை ஏற்பதில் சில வரையறைகள் பின்பற்ற நேரிடுகின்றன.
4. இந்த அனைத்து காரணிகளின் விளைவாக வேளாண் துறையிலிருந்து விலகி, பொருளாதாரமானது உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பின் அடிப்படையில் ஒரு தேவையை ஏற்படுத்துகிறது.

9) தொழிற்சாலை என்றால் என்ன?

**பதில் :** பொதுவாக மூலப்பொருட்களை எளிதில் பயன்படுத்த கூடிய பொருட்களாக மாற்றுவதில் ஈடுபட்டுள்ள எந்த ஒரு மனித நடவடிக்கையையும் நிறைவேற்றுமிடம் 'தொழிற்சாலை' என்று அழைக்கப்படும்.

10) தொழில்மயமாதல் என்றால் என்ன?

**பதில் :** நுகர்வோருக்கும் மற்ற உற்பத்தியாளர்களுக்கும் தேவைப்படும் பொருட்களை நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி பெருமளவில் உற்பத்தி செய்வது தொழில்மயமாதல் எனப்படும்.

11) சிறுகுறிப்பு தருக.
1. நுகர்வோர் பொருட்கள்
2. மூலதன பொருட்கள்

**பதில் :** **1. நுகர்வோர் பொருட்கள்:**
இறுதி நுகர்விற்காக வைத்திருக்கும் பொருட்கள் நுகர்வோர் பொருட்கள் எனப்படும்.
**2. மூலதன பொருட்கள்:**
இப்பொருளை மற்றொரு உற்பத்தியில் பயன்படுத்தினால் அது மூலதன பொருட்கள் எனப்படும்.

12) ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் பற்றி எழுதுக.

**பதில் :** 1. ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் என்பது இந்திய அரசின் ஒரு முன்முயற்சித் திட்டமாகும்.
2. இதன் முதன்மையான நோக்கம் தொழில் தொடங்குவதற்கான தொடக்க முயற்சிகளை ஏற்படுத்துதல், வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் வளங்களை உருவாக்குதல் ஆகும்.

13) ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டம் பற்றி எழுதுக.

**பதில் :** ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டம் என்பது பச்சைப் புல்வெளி நிறுவனம் அமைப்பதற்காக குறைந்தபட்சம் 10 லட்சத்துக்கும், 1 கோடிக்கும் இடையில், ஒரு பட்டியல் சாதியினர் (SC) அல்லது பட்டியல் பழங்குடியினர் (ST) மற்றும் ஒரு வங்கிக் கிளைக்கு ஒரு பெண் கடன் பெறுபவர் என கடன் வழங்கி வங்கிக்கடன்களை எளிதாக்குவதே இத்திட்டமாகும்.

14) தொழில் முனைவோர் என்றால் என்ன?

**பதில் :** ஒரு "தொழில் முனைவோர்" என்பவர் புதிய சிந்தனைகளுக்கும், வணிக செயல்முறைகளுக்கும் புத்தாக்கம் புனைபவர் ஆவார். இவர்களிடம் சிறந்த நிர்வாகத் திறன், வலிமையான குழுவை அமைக்கும் திறமைகளும் மற்றும் தேவையான தலைமைக்கான பண்புகளும் இருக்கும்.

15) சிவகாசி "விட்டில் ஜப்பான்" குறிப்பு வரைக.

**பதில் :** 1. தீப்பெட்டி உற்பத்தி தொழிற்சாலையில் புகழ்பெற்று விளங்கும் சிவகாசி பகுதியானது தற்பொழுது பட்டாசு பற்றும் அச்சிடும் தொழிலில் நாட்டின் சிறந்த நகரமாக திகழ்கிறது.
2. இந்தியா 90% பட்டாசு உற்பத்தி, 80% பாதுகாப்பான தீப்பெட்டி உற்பத்தி மற்றும் 60% அச்சுப்பணி தேர்வுகளுக்கு முக்கிய பங்காக சிவகாசியையே சார்ந்துள்ளது.
3. அச்சிடும் பணிகளில் தனித்துவம் பெற்று மேலோங்கி விளங்குகிறது. காலனித்துவ காலத்தில் தொடங்கப்பட்ட இத்தொழிலானது தற்பொழுது அதிக அளவில் வேலைவாய்ப்பை அளிக்கிறது. எனவே சிவகாசி "லிட்டில் ஜப்பான்" என்று அழைக்கப்படுகிறது.

**5 மதிப்பெண் வினாக்கள்** 4 x 5 = 20

16) வெற்றிகரமான தொழில்துறை தொகுப்புகளின் முக்கிய பண்புகள் என்ன?

**பதில் : வெற்றிகரமான தொழில் வகுப்புகளின் முக்கிய பண்புகள் பின்வருமாறு:**
1. சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் புவியியல் பகுதிகளுக்கு அருகாமையில் இருத்தல்.
2. துறைசார்ந்த சிறப்பு கவனம்.
3. நிறுவனங்களுக்கிடையே நெருக்கமான அல்லது பரஸ்பர முறையில் இணைந்திருத்தல்.
4. புத்தாக்கத்தினால் எளிதாக்கும் ஒரு சமூக கலாச்சார அடையாளம்.
5. பல்வேறு திறமையான தொழிலாளர்கள்.
6. சுய உதவிக்குழுக்கள் செயல்படுதல்.
7. பிராந்திய மற்றும் நகராட்சிகளுக்கு அரசின் ஆதரவு.
போன்றவற்றால் நிறுவனங்கள் ஒருவருக்கு ஒருவர் பரஸ்பரமாக ஒத்துழைத்து போட்டியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதே வேளையில் பரஸ்பர ஒத்துழைப்பின் மூலம் அவர்கள் தங்கள் திறனை விரிவுபடுத்த முடியும்.போட்டியின் மூலம் அவர்கள் மிகவும் திறமையானவர்களாக மாற கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

17) தொழில்மயமாதலுக்கு தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்ட கொள்கைகளின் வகைகள் பற்றி விரிவாக எழுதுக.

**பதில் : கல்வி :**
1. திறமை வாய்ந்த மனித வளங்கள் தொழிற்சாலைக்குத் தேவைப்படுகிறது. நமது மாநிலமானது தொடக்கக் கல்விக்காக அதிகமான கவளம் செலுத்துவது மட்டுமல்லாமல், படித்தவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது மற்றும் எண் கணித திறன்களை வளர்ப்பதிலும் கவளம் செலுத்துகிறது.
2. இது நாட்டில் மிக அதிகப்படியான தொழில்நுட்ப வல்லுநர்களை தருவதிலும் பெயர்பெற்ற இடமாகும்.
3. இந்தியாவில் அதிக அளவில் பொறியியல் கல்லூரிகள், பல்தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் தொழிற்பயிற்சி மையம் நமது மாநிலத்தில்தான் உள்ளது.
**உள்கட்டமைப்பு :**
1. மாநிலங்களில் உள்ள சிறிய நகரங்கள் மற்றும் கிராமங்களில் தொழில்மயமாதல் பரவுதலுக்கு மின்சார விநியோகம் சிறப்பான பங்கினை வகிக்கிறது. மின்சார விநியோகம் மட்டுமல்லாது, தமிழ்நாடானது மிகச் சிறந்த போக்குவரத்து உள்கட்டமைப்புக்குப் பெயர் பெற்றது ஆகும்.
2. கிராமப்புற சிறு சாலை வசதிகளால் அருகிலுள்ள சிறு நகரங்களுடனும், பெருநகரங்களுடனும் சிறப்பான முறையில் இணைக்கப்பட்டுள்ளது. பொது மற்றும் தனியார் போக்குவரத்து துறைகள் ஒருங்கிணைந்து கிராமப்புற மற்றும் நகர்புறங்களின் இணைப்பை எளிதாக்கியுள்ளன. சிறு உற்பத்தியாளர்களை சிறந்த சந்தைகளோடு இணைத்து அவர்களுக்கு நற்பலனைக் கொடுக்கிறது.
**தொழில்துறை ஊக்குவிப்பு :**
1. கல்வி போக்குவரத்து மற்றும் ஆற்றல் வாய்ந்த உள்கட்டமைப்புகளுக்கு முதலீடு செய்வது மட்டுமல்லாமல் சிறந்த தொழில் பிரிவுக்கான தொழிற்சாலை விஸ்தரிப்புகளை சிறந்த பகுதிகளில் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.
2. பொருளாதார சீர்திருத்தத்திற்குப் பின் குறிப்பிட்ட காரணிகளான தானியங்கி, தானியங்கி கருவிகள், உயரிய தொழில் நுட்பம் மற்றும் செய்தித் தொடர்புக்கான பிரிவுகள் நல்ல முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
3. எனவே பெரிய, சிறிய மற்றும் நடுத்தர பிரிவில் மேம்படுத்த உதவும் ஆதரவான உள்கட்டமைப்புகளை நாடு முழுவதும் பல இடங்களில் தொழில்துறை மேம்பாடு முகமைகளை அரசு நிறுவியுள்ளது.

18) தொழில்முனைவோரின் பங்கினைப் பற்றி விளக்குக.

**பதில் : தொழில் முனைவோரின் பங்கு:**

1. நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தில் தொழில் முனைவோரின் பங்கு மிக முக்கியமானதாகும்.
2. தொழில் முனைவோர் கிராமப்புற மற்றும் பின்தங்கிய தொழிற்சாலைகளை முன்னேற்றுவதுடன், நாட்டில் பல்வேறு பகுதிகளில் நிலவும் வட்டார ஏற்றத் தாழ்வுகளை நீக்குகிறார்கள்.
3. இவர்கள் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மற்றும் தலா வருமானம் உயர்வதற்கு உதவி புரிகிறார்கள்.
4. குடிமக்களின் அசையா சேமிப்புகள் மற்றும் நாட்டின் ஏற்றுமதி வியாபாரம் மூலமாக மூலதனத்தை செயல்பட வைக்கிறார்கள்.
5. தொழில் முனைவோர் கைவினைஞர்கள், தொழில்நுட்ப தகுதிவாய்ந்த நபர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களுக்கு பெரிய அளவிலான வேலை வாய்ப்பை வழங்குகிறார்கள் மற்றும் தொழில் நுட்பத்தை மாற்றும் சூழலில் பணியாற்றி மேலும் புத்தாக்கத்தின் மூலம் இலாபத்தை அதிகரிக்க முயற்சிக்கின்றனர்.
6. தொழில் முனைவோர், குறைந்த விலையில் சிறந்த தரமான பொருட்களைப் பெற மக்களுக்கு உதவுகின்றனர்.
7. இதன் விளைவாக அவர்களின் வாழ்க்கைத்தரம் மேம்படுகிறது.

19) தமிழ்நாட்டின் முக்கிய தொழில்துறை தொகுப்புகள் மற்றும் அவற்றின் சிறப்புகள் பற்றி எழுதுக.

**பதில் : அ. தானியங்கி தொகுப்புகள்:**

1. சென்னை பெரிய அளவிலான வாகனத் தொழில்துறை தளமாக இருப்பதால் "ஆசியாவின் டெட்ராய்ட்" என்று அழைக்கப்படுகிறது.
2. சென்னையானது மிக அதிகமான தானியங்கி தொழிலை ஒருங்கிணைக்கும் மற்றும் உதிரிபாகங்கள் செய்யும் தலைமை இடமாகத் திகழ்கிறது.
3. சில உள்நாட்டு நிறுவனங்களான TVS, TI சைக்கிள்ஸ், அசோக் லேலண்ட் மற்றும் ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் ஆகியன இதற்கு முன்னர் இருந்தன.

**ஆ. வாகன மற்றும் பேருந்து கட்டுமானத் தொழில் தொகுப்புகள்:**

1. தமிழகத்தின் மேற்கு பகுதியில் உள்ள நாமக்கல் மற்றும் திருச்செங்கோடு பகுதிகள் சுமை தூக்கும் வாகன முழுபாக கட்டமைப்பிற்கான தொழிற்சாலைகளுக்குப் பெயர் பெற்ற இடங்களாகும்.
2. சுமை தூக்கும் வாகனக் கட்டுமானத் துறையில் 150 தொழில்களில் 250 அலகுகளில் இந்த தொகுப்பில் 12 பெரிய அளவிலான சுமை தூக்கும் வாகனக் கட்டுமான துறைகள் உள்ளன.

**இ. நெசவுத் தொழில் தொகுப்புகள்:**

1. இந்தியாவில் மிகப் பெரிய நெசவுத் தொழில் துறைகளுக்கு தமிழ்நாடு தாயகமாக விளங்குகிறது.
2. கோயம்புத்தூரைச் சுற்றி 100 முதல் 150 கி.மீ. சுற்று வட்டார பகுதிகளாகும்.
3. ஈரோடு மற்றும் சேலம் பகுதியிலும் அதிகளவிலான மின்தறி அலகுகள் இருப்பதால் மின்விசைத் தொழில் மிகவும் பரவலாக உள்ளன.
4. நாட்டின் பருத்தி பின்னலாடை ஏற்றுமதியில் கிட்டத்தட்ட 80% பங்கினைக் கொண்டுள்ளது.

**ஈ. வாகன கட்டுமானத் தொழில்:**

1. வாகன கட்டுமானத் தொழிலமைப்பைத் தவிர மேஜைத்துணி, திரைச்சீலைகள், படுக்கை விரிப்புகள் மற்றும் துண்டுகள் போன்ற வீட்டு அலங்கார பொருட்களை ஏற்றுமதி செய்யும் முக்கிய மையமாக கரூர் உள்ளது.
2. இத்தகைய நவீன தொகுப்புகளைத் தவிர பட்டு மற்றும் கைத்தறிப் புடவைகளுக்கு பிரபலமான மதுரை மற்றும் காஞ்சிபுரம் போன்ற பாரம்பரிய கைவினைத் தொகுப்புகளும் உள்ளன.

**உ. தோல் மற்றும் தோல் பொருட்களின் தொகுப்பு:**

1. இந்தியாவின் 60% தோல் பதனிடும் உற்பத்தித்திறனையும் 38% தோல் காலணிகள் மற்றும் தோல் உதிரி பாகங்கள் அதனைச் சார்ந்த பொருட்களின் உற்பத்தியையும் தமிழ்நாடு பெற்றிருக்கிறது.
2. வேலூர் அதனைச் சுற்றியுள்ள ராணிப்பேட்டை, ஆம்பூர், வாணியம்பாடி ஆகிய நகரங்களில் நூற்றுக்கணக்கான தோல் உற்பத்தி மற்றும் பதனிடும் வசதியைக் கொண்டுள்ளது.
3. தோல் பொருட்கள் ஏற்றுமதியில் இந்தியாவிலேயே முதன்மை மாவட்டமாக வேலூர் திகழ்கிறது.